REGISTERED No. M. 6165. க. பை. 13

400

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1958
MADRAS

## ஆகஸ்டு—1938.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| சக்திகளைச் சிருஷ்டிக்கும் மகா சக்தி ... ... | 1 |
| கலீபா மாமூன் ரஷீதும் ஒரு திருட்டுப் பையனும் (ரஹ்மத் பாகவி) சிறுவர் பகுதி ... ... | 9 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... | 11 |
| சன்மார்க்க முரசு (மாஸ்டர் கமால்பாபு) ... | 16 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 17 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) ... ... ... | 23 |
| மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... ... ... | 27 |


...இஸ்லாம் ஆபீஸ்:
...ராட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

3L
18707

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0–13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# கைத்தொழில் சம்பாதனை வழிகள்

சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சிறு வியாபாரம் செய்யலாம் என்ற உத்தேசத்துடன் இருக்கும் ஆட்களுக்கு தேவைப்படும் விஷயங்களை நூற்றுக் கணக்காக இந்த புஸ்தகம் கொண்டுள்ளது. இந்த புஸ்தகத்தில் உள்ள முக்கிய விஷயங்களுக்கு அட்டவணை அகராதி முறையில் 16 பக்கங்கள் கொண்டது சேர்க்கப் பட்டிருக்கிறது.

இந்த புஸ்தகம் 224-பக்கங்கள் கொண்டது. இதை பெதர்வைட் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2–60

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

ஆகஸ்டு—1958.


## சக்திகளைச் சிருஷ்டிக்கும் மகா சக்தி!

காலம் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு போகிறது! நேற்று இருந்த நிலைமை இன்று இல்லை. இன்று உள்ள நிலைமை நாளைக்கு இருக்குமென்று நிச்சயமில்லை.

காலம் மாறிக்கொண்டு போகப்போக, மனிதரின் நாகரீகமும் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு போகிறது. மனிதன் தினமும் ஒரு புது வழக்கத்தை தன்னில் ஏற்படுத்திக் கொள்கிறான். கால மாறுதலுக் கேற்ப, மனித உள்ளமும் உடைமையும் மாறிக் கொண்டே போகின்றன.

மனிதனின் இயற்கை சிருஷ்டியானது, மற்றெல்லா ஜீவ சிருஷ்டிகளின் தன்மைகளைவிட தனிச் சிறப்பும் விசேஷ அம்சமும் உடையதாகும். மனிதனின் சிருஷ்டிப்பில், மாறுதல்களையும் அபிவிருத்திகளையும் ஏற்றுக் கொள்ளும் தன்மை அமைந்திருக்கின்றது. மனிதன் புதுப்புது விஷயங்களிலேயே சதா கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

மனிதன் ஆதியில் காலால் நடந்து திரிந்து கொண்டிருந்தான். அதனால் அவனுக்குக் கொஞ்சம் கஷ்டம் தெரிந்தது. கால் வலித்தது. இந்தக் கால்வலியும் ஏற்படக் கூடாது, நடந்து செல்லும் வேலையும் நடைபெற வேண்டுமென்று கருதினான். அதற்காக அவன் என்ன செய்தான் என்பதை ஆராய்ந்தால், மனிதன் எவ்வளவு தீவிரவாதி

யாய் இருக்கிறுன், என்ன காரியம் செய்யத் துணிகிறுன் என்பது தெரியவரும்.

ஆதியில் மனிதன் காட்டில் அலேந்து திரிந்து கொண்டிருந்த போது, ஓரிடத்தில் அயர்ந்து கால் வலிகண்டு உட்கார்ந்து விட்டான். அப்போது அங்கொரு நாற்கால் பிராணி மேய்ந்து திரிந்து கொண் டிருப்பதைக் கண்டான். முதலில் அப்பிராணியைக் கண்டு இவன் மிரண்டான்; பிறகு இவனேக்கண்டு அந்தப் பிராணி மிரண்டது.

பிறகு மனிதன் தன் கையிலிருந்து ஏதோ தழையையோ கிழங்கையோ அப்பால் தூக்கி எறிந்தான். அருகில் மேய்ந்து கொண் டிருந்த அந்தப் பிராணி, அதை எடுத்துத் தின்ன அருகில் வந்தது. மனிதன் அதன் சுபாவத்தைக் கண்டான். மேலும் சில கிழங்குகளேயும் இலே சருகுகளேயும் அதற்குப் போட்டான். அது அவைகளேத் தின்று விட்டு, மனிதனேத் தலேதூக்கிப் பார்த்தது. அதாவது அது அவனுக்கு நன்றி செலுத்தியது. இதை அப்போது மனிதன் உணர்ந்து கொண்டானே, யாதோ!

தினமும் அந்தப் பிராணி அவனது இருப்பிடத்துக்கு வருவதும், அவன் கொடுக்கும் பொருளான ஆகாரத்தைத் தின்றுவிட்டுப் போவ தும் வழக்கமாய் இருந்தது. அப்பிராணி முன்னிலும் அதிகமாக மனிதனே நெருங்கிவந்து பழகியது. இதைக்கண்டு மனிதனுக்கு அதனிடம் பழக வேண்டுமென்று விருப்பம் ஏற்பட்டது. அதனிடம் சென்றுன். அதைத் தட்டிக் கொடுத்தான். அது கனேத்து, நன்றி யுடன் நட்புறவையும் தெரிவித்தது.

மனிதன் அந்தப் பிராணியின் முதுகின்மேல் மெல்ல ஏறி உட்கார்ந்து பார்த்தான். அது அவனே ஏற்றுக்கொண்டது. அதன் பிடரி மயிரைப் பிடித்துக்கொண்டான். அது கொஞ்சதூரம் ஓடியது. பிறகு அவன் பிடரி மேலிருந்து கீழே வீழ்ந்து விட்டான்.

இதிலிருந்து அவனுக்கு ஒரு பாடம் புலனுயிற்று. இந்தப் பிராணியைப் பழக்கினுல் இதன் மீது ஏறிக்கொண்டு எங்கும் போக லாம் என்று எண்ணினுன். அதன்மீது ஏறி அமரும்போது கீழே விழுந்துவிடாம லிருக்க, என்ன செய்வதென்று யோசித்தான். காட் டில் படர்ந்திருந்த கொடியை எடுத்துத் திரித்து உறுதியாக்கி, அதன் கழுத்தில் கட்டி கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். இதற்கும் அந்தப் பிராணி இடங் கொடுத்தது.

[stamp]

இவ்வாருக சிறுகச்சிறுக, மனிதன் இயற்கையாகவே குதிரை என்னும் பிராணியைப் பிடித்து பழக்கி சவாரி செய்யுத் தெரிந்து கொண்டான். அதன்பின் குதிரைக்கு சேணம் என்றும், லகாம் என்றும், கால்படம் என்றும் என்னென்னவோ ஏற்படுத்திக் கொண்டான்.

இயற்கையாக மனிதன் தன் கால்களால் வெகு தூரம் நடக்கும் சிரமத்தை தவிர்த்துக் கொள்வதற்காக, முதன் முதல் கண்டுபிடித்த வாகனம் குதிரை வாகனம்தான். காடு, மேடு, கரடு, முரடு பூமிகளையும் அக்குதிரை வெகு துரிதத்தில் கடந்து வந்ததால், மனிதன் வெகு தூரப் பிரயாணத்தைக் குதிரையைக் கொண்டு செய்து வந்தான்.

மனிதன் முதல்முதல் கண்டு பிடித்த ஒரு சௌகர்யத்துக்கே, இந்தக் குதிரை சவாரி உதாரணத்தைச் சொன்னேம். இவ்வாறேதான் மனிதன் ஒன்று இரண்டல்ல, ஆயிரக் கணக்கான சாதனங்களைக் கண்டுபிடித்துக் கொண்டு பயனடைந்து வருகிறுன்.

மனிதனுக்குச் சவாரி செய்வதற்கு உபயோகப்படும் உயிர்ப் பிராணிகள் பலவகை. அவற்றில் குதிரை, யானை, ஒட்டகம், கழுதை, எருது முதலியன குறிப்பிடத் தக்கவை.

பிறகு மனிதன் யோசிக்கலானுன்: குதிரையின் முதுகில் ஒரு ஆள்தான் உட்கார்ந்து செல்ல முடியும். உருளும் சக்கரங்கள் சில செய்து அதன் மீது பலகைகளை அடித்துப் பெட்டியாக்கி, அதனை குதிரைக்குப் பின்னுல் கட்டிவிட்டு, குதிரையை ஓட்டினுல் ரதம் என்னும் இந்த வண்டியும் கூடவே செல்லும். இதில் நாலைந்து பேர்களும் உட்கார்ந்து சவாரி போகலாமே என்று யோசித்து, அதைச் செய்தும் பார்த்தான்.

இவ்வாறு மனிதன் குதிரை வண்டியை உண்டாக்கிக் கொண்டான். உயிர் பிராணிகள் இழுத்துச் செல்லும் வண்டி வாகனுதிகளில் குதிரை வண்டிதான் மிக வேகமாகச் செல்லக்கூடியது.

குதிரை செல்லும் வேகம் கூட பிறகு, மனிதனுக்குத் திருப்தி அளிக்க வில்லை. இன்னும் அதிக வேகமாகச் செல்ல வேண்டுமென்று விரும்பினுன். இரண்டு குதிரைகளைப் பூட்டி ஓட்டிச் சென்று பார்த்தான்; பிறகு நான்கு குதிரைகளைப் பூட்டி, இன்னும் வேகமாக ஓட்டிச் சென்று பார்த்தான்.

லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களிலே ஒரு நூற்றுண்டுக்கு முன் ரோட்டில் தண்டவாளம் போட்டு அதன் மீது "டிராம்வண்டி"யை

வைத்து, ஆறு குதிரைகளைப் பூட்டி சர்வீஸ் நடத்தி வந்தார்களாம். ஆதியில் டிராம் வண்டிகளைக் குதிரைகள் தான் இழுத்துவந்தன.

பிறகு, வண்டியை செலுத்த, மனிதனானவன், குதிரைகளுக்குப் பதிலாய், இயந்திரத்தை உபயோகிக்கலானான். இயந்திரம் என்றால் என்ன? முதலில் மனிதன் நீராவியைக் கண்டு பிடித்தான். நீர் ஆவியினால் என்ன செய்ய முடியும் என்பதைப் பல வகையில் ஆராய்ந்தான். நீர் ஆவியை குழாய் மூலம் செலுத்தி அதைச் சுழலும் ஒரு சக்கரத்தில் இணைத்தால், அந்த நீராவி மூச்சு விடும் வேகத்தில், சக்கரம் சுழலும் என்று கண்டு பிடித்துக் கொண்டான்.

நீராவியினால் எஞ்சின் கண்டு பிடித்தான். அந்த எஞ்சின் என்னும் இயந்திரம் பல வேலைகளுக்கும் உபயோகமாகும் என்று அனுபவத்தால் தெரிந்து கொண்டான்.

மனிதன், நீராவி வண்டியை தெருவில் ஓட்டிப் பார்த்தான். அதற்குப் பெயர் 'மோட்டார் வண்டி' என்று வைத்துக் கொண்டான். அந்த நீர்ஆவி வண்டியை, இரும்புத் தண்டவாளத்தின் மீதும் ஓட்டிப் பார்த்தான். அதன் பெயர் 'ரயில் வண்டி' என்று வைத்துக் கொண்டான்.

பரந்த பூமியாகிய தரையில் பிரயாணம் செய்ய, மனிதன் குதிரையையும் பிறகு நீராவி இயந்திரத்தையும் உபயோகப் படுத்தினான். அப்போது பரந்த கடலின் மீதும் தண்ணீரின் மீதும் பிரயாணம் செய்ய, மனிதன் படகைத் தான் உண்டாக்கினான். கையினாலும் பிறகு துடுப்பினாலும் சிறு படகுகளைத் தள்ளிக் கொண்டு போனான். பிறகு பெரிய படகு செய்து, அதை காற்று வேகத்தால் செலுத்திக் கொண்டு போக, பாய்மரத்தை கட்டி இயங்க வைத்தான்.

காற்றின் சக்தியினாலும் மனிதனுக்குத் திருப்தி ஏற்பட வில்லை. புயல் அடித்தால், சூறாவளி வீசினால், மனிதனால் அந்தக் காற்றை கட்டுப் படுத்த முடிய வில்லை. காற்று அவனை எங்கோ இழுத்துக் கொண்டு போய் தள்ளி விடுகிறது. சில சமயம் பாய்மரம் முறிந்து, பர்தா கிழிந்து, கப்பலே தண்ணீருள் மூழ்கிப் போய் விடுகிறது.

எனவே, மனிதன் பெரிய படகு செய்து அதை நீராவி சக்தியின் விசையினால் ஓட்டிப் பார்த்தான். அதில் வெற்றி கண்டான். அந்த நீராவிப் படகின் உருவத்தைப் பெரிதாக்கி, அதற்கு "கப்பல்" என்று பெயர் வைத்துக் கொண்டான்.

மனிதன், தரையில் ஆதிக்கம் கொண்டான்; பிறகு நீரில் ஆதிக்கம் கொண்டான். திடலிலும் கடலிலும் அவனுக்குப் பூரண ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதால், அதன் பின் ஆகாயத்திலும் ஆதிக்கம் பெறும் மார்க்கத்தைக் கண்டுபிடித்தான். ஆகாயத்தில் நிலவி நிறைந்து இருப்பது காற்று. அந்தக் காற்றை கட்டுப்படுத்தும் முறையில் கவனம் செலுத்தி, பலகாலம் ஆராய்ச்சி செய்து "ஆகாய விமானத்தை"க் கண்டு பிடித்துக் கொண்டான்.

நவீன நாகரிக அழகு மயமாய் விளங்கும் இந்தக் காலத்தில் நாம் பார்க்கும் மோட்டார் வண்டியும், ரயில் தொடரும், பெரும் கப்பலும், ஆகாய விமானமும் சுமார் 50 வருடங்களுக்கு முன் இப்போது காணப் படுவதுபோல், அபரிதமான சௌகர்யங்களும் துரித வேகமும் உடையனவாய் இருந்ததில்லை. ஐம்பது வருஷங்களுக்கு முன் இருந்த மோட்டாரையும், கப்பலையும், விமானத்தையும், ரயிலையும் நம் பள்ளிக் கூடச் சிறுவர்கள் பார்த்தால் பரிகாசம் செய்வார்கள். 60-பேர் சௌகர்யமாய் அமர்ந்து செல்லும் பஸ்கள் கிராமங்களுக் கெல்லாம் ஓடிக் கொண்டிருக்கும் இப்போது, ஒரு கல்யாணக் கோஷ்டி, இரட்டை மாட்டுக் கட்டை வண்டியில் ஊர்ந்து போய்க் கொண்டிருந்தால், அதைப் பார்க்கப் பரிகாசமாய்த் தான் இருக்கிறது.

மனிதன் கண்டு பிடித்த அபூர்வ சக்திகளில் மின்சார சக்தியைக் குறிப்பிட வேண்டும். 'எலக்டிரிக் பவர்' என்னும் மின்சார சக்தியினால், இப்போது குக்கிராம வாசிகளும் பயனடைந்து வருகிறார்கள். ஆனால் மின்சார சக்தி என்றால் என்ன வென்று, இன்றுங் கூட வெகு பேருக்குத் தெரியாது.

எங்கிருந்தோ கம்பி கொண்டு வரப்படுகிறது; அதில் விளக்குப் பொருத்தி, பித்தானை அழுத்தினால், எண்ணெய் இல்லாமல் திரி இல்லாமல் தூண்டுகோல் இல்லாமல் ஜெகஜ் ஜோதியாய் விளக்கு எரிகிறது.

இந்த மின்சார விசையினால், கிராம வாசிகள் 'பம்பு' குழாய் வைத்துப் பயிர்களுக்குத் தண்ணீரும் இறைத்து ஊற்றுகிறார்கள். மின்சார விசையினால் இந்நாளில் உலகில் என்னென்னவோ அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

மின்சார உதவி கொண்டு "ரேடியோ"வும் இக்காலை வேலை செய்கிறது. ரேடியோ என்றால், பாட்டு கேட்கிறோமே ஒரு

பெட்டி அது மட்டும் தான் என்று எண்ண வேண்டாம். ரேடியோ என்றால், ஆகாயத்தில் பரவி வியாபிக்கும் ஒலி அலைகளை உலகில் எந்த திக்கி லிருந்தும் கிரஹித்துக் கொள்ளும் அபூர்வசக்தி யுள்ள 'மாயப் பெட்டி' என்றுதான் சொல்ல வேண்டும்.

டில்லிமா நகரில் தம் தலைவர் பிரசங்கம் செய்கிறார் என்றால், ஆயிரம் மைலுக்கு இப்பால் நாம், சென்னையில் நம் வீட்டி லிருந்து கொண்டு, ரேடியோ மூலம் அந்தப் பிரசங்கத்தை மிகத் தெளிவாகக் கேட்க முடிகிறது. அது மட்டுமல்ல, பிரசங்கம் புரியும் அந்தப் பெரிய மனிதரை நம் ரேடியோ பெட்டியில் இணைக்கப்பட்டுள்ள வெண் கண்ணாடித் திரையில், பிரத்தியக்ஷமாய் உருவத்தோற்ற அசைவையும் காண முடியும். இதன் பெயர் 'டெலிவிஷன்' என்பதாகும்.

அற்புத 'டெலிவிஷன்' மூலம், உலகத்தில் எந்த திக்கில் என்ன நிகழ்கிறது என்பதையும் கேட்டும், கண்டும் உணரலாம். ஆகாய மண்டலத்தில், வானவெளியில் என்ன அற்புத கோளங்கள் இருக்கின்றன வென்பதையும், பூமிக்கு அடியில் பாதாளத்தில் என்ன உற்பத்தியாகி இருக்கிறது என்பதையும், கடலுக்கு அடியில் என்னென்ன உயிர் இனங்கள் நெளிந்து கொண்டிருக்கின்றன என்பதையும், மனிதன் உட்கார்ந்து இருந்து கொண்டே, தெரிந்து கொள்வதற்கு இக்காலை வசதிகள் ஏற்பட்டுள்ளன.

நீர் ஆவிக்குப் பின், நெருப்பு ஆவிக்குப்பின், மின்சார சக்திக்குப் பின், இப்போது மற்றொரு மகாப் பெரும் சக்திப் பொருளை மனிதன் கண்டு பிடித்துள்ளான். அதன் பெயர் அணுசக்தி.

அணு என்பது கண்ணுக்குத் தெரியாத தூசு இருக்கிறதே அதை ஆயிரம் துணுக்குகளாக உடைக்க வைத்தால், அது உடைந்துச் சிதறும் போது உண்டாகும் வேகத்தைக் கட்டுப் படுத்தி அதைக் கொண்டு எதையும் இயங்க வைத்தல் என்று கருத்து உரைக்கப் படுகிறது.

சோடா புட்டி உடைக்கப் படுவதைக் கண்ணால் பார்க்கலாம்; ஆனால் அணு பிளக்கப்படுவதைக் கண்ணால் காணமுடியாது. மின்சார ஒளியைத்தான் கண்ணால் பார்க்கலாம்! ஆனால் மெல்லிய செப்புக் கம்பியின் வழியே வரும் மின்சார சக்தியைக் கண்ணால் காண முடியாது.

இந்தச் சக்திகளை யெல்லாம் மனிதன் சிருஷ்டித்து விடுகிறான் என்று மனிதராகிய நாம் கூறுகின்றோம். ஆனால் இவ்வளவு அபார சக்தி வாய்ந்த மனிதனை யார் சிருஷ்டிக்கிறார் என்று சொல்லப் போகும் போது, மாந்தருக்குள் அபிப்பிராய பேதமேற்படுகிறது.

மனிதனின் சுபாவம் சற்று அகங்காரம் கொண்டது. தன்னை விட சிறந்தது, பெரியது, மகத்தானது ஒன்று உண்டென்பதை எளிதில் ஒத்துக் கொள்ள மாட்டான். தானே மற்றெல்லோரிலும் அறிவாளி என்று ஒவ்வொருவனும் தன்னளவில் கூறிக் கொள்கிறான். முட்டாள்கூட, தன்னைப் புத்திசாலி என்றே எண்ணிக் கொள்கிறான். ஒரு குழந்தைகூட, தான் புரியும் சின்ன காரியமே பிரதானமானது என்று கருதிக் கொள்கிறது. எனவே, எறும்பும் தன் கையால் எண்சான் என்று தன்னை நினைத்துக் கொள்கிறது.

சக்திகளில் எந்த சக்தி மிகப் பெரியது என்று, வரையறுத்துச் சொல்வது அவரவர் அறிவாற்றலைப் பொருத்த விஷயம். மின்சார சக்தி பெரிதா, அணு சக்தி பெரிதா என்று கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. அனுபவித்துத்தான் தெரிந்து கொள்ள முடியும்.

எந்த சக்தியேனும் பெரிதாய் இருந்து போகட்டும். ஆனால் அந்த சக்தி எப்படி உண்டாயிற்று? ஆதி பூர்வமாய் அந்த சக்தியை உண்டாக்கியவர் யார்? என்று கவனிக்கப் போனால், எல்லா சக்திகளைக் காட்டினும் மகா சக்தி ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்பதை உய்த்து உணர்ந்து கொள்கிறோம்.

மனிதன்தானே உலகில் சக்திகளை உண்டாக்குபவன்? அவனை உண்டாக்கியவன் யார்? எல்லாம் வல்ல ஏக இறைவனாகிய அல்லாஹு தஆலா ஒருவன் தான் மகா சக்தியாளன். இதில் சந்தேகமே கொள்ள வேண்டிய தில்லை. சூரியனையும் சந்திரனையும், பகலையும் இரவையும், நட்சத்திரங்களையும் கிரஹங்களையும், ஆகாய வெட்ட வெளியையும், இந்தப் பரந்த பூமியையும், விசாலமான கரைகாணாக் கடலையும் உண்டாக்கியவனே மகா சக்தியாளன்.

["இன்னல்லாஹ அலா குல்லி ஷையின் கதீர்" (சகல வஸ்துக்கள் மீதும் மகா சக்தியாளன் அல்லாஹ்தான்")]

"அல்லாஹு அக்பர்" (அல்லாஹ் தான் மிகப் பெரியவன்).

# இரத்தச் சின்னம்

## இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளியொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவ னொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்துத் திட்டமிட்டுத் திறமையோடும் தீறத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்கமில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1-28

காமில் ஒலி ஹறஜ்றத்

# அபூபக்கர் ஷிப்லி (ரலி) ஜீவிய சரித்திரம்

தவ்ஹீத் என்னும் ஏக தெய்வத்துவத்தை அறிய, சுகபோகங்களை விட்டு பக்கீர் கோலம் கொண்டு ஹக்கைக் கண்ட மஹான் ஷிப்லி (றலி) அவர்கள் ஞான மார்க்கமான தஸவ்வுபுடைய தீர்க்கத்தைக் கண்டறிந்த வரலாறும், அவர்கள் புரிந்த போதனைகளும், அவர்களின் ஜிவியமும் அடங்கியது. விலை ரூ. 1-80

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைறோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.




# கலீபா மாமூன் ரஷீதும் ஒரு திருட்டுப் பையனும்

ரஹ்மத் (பாகவி)

பண்டைப் போது, பக்தாத் நகரை ஆண்டுக் கொண்டிருந்த கலீபாக்களில் கலீபா மாமூன் ரஷீத் என்பவர் குறிப்பிடத் தக்கவர் ஆவார்.

மாமூன் ரஷீத் நல்ல குணமும், தயாளமான சுபாவமும் உடையவராக இருந்தார். சகிப்புத் தன்மையும் மன்னிக்கும் தன்மையும் அவரிடம் அதிகம் உண்டு. அடிமைகளையும் வேலைக்காரர்களையும் கூட அவர் அன்பாக நடத்துவார்.

அவருடைய சொந்த ஜாகையில், தண்ணீர் குடிக்கும் பாத்திரம் (கிளாஸ்) அடிக்கடி திருடு போய்க் கொண்டிருந்தது. யார் எடுக்கிறார்களென்று தெரிய வில்லை.

ஒருநாள் கலீபா மாமூன் ரஷீத், ஓரிடத்தில் நல்ல குவளைகளையும் பாத்திரங்களையும் வைத்து விட்டு, ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

கலீபாவுடைய சொந்த அறையில் ஒரு அடிமைச் சிறுவன் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் மேல்தான் கலீபாவுக்குச் சந்தேகம். கலீபா ஒளிந்து பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அந்த அடிமைச் சிறுவனுக்குத் தெரியாது. வழக்கம் போல், அச்சிறுவன், மெல்ல வந்து ஒரு அழகிய குவளையை எடுத்துக் கொண்டுபோய், மறைத்து வைத்துக் கொண்டான். இதை கலீபா கண்ணுறக் கண்டு விட்டார்; எனினும் அப்போதே பிடிக்க வில்லை; அப்படிச் செய்தால் அவன் பயந்து மனம் உடைந்து, சோர்ந்து விடுவான் என்று நினைத்தார்.

மறுநாள் காலை, கலீபா மாமூன் ரஷீத், அந்த அடிமைச் சிறுவனை அழைத்து கேட்கலானார்.:—

"அடே பையா! நீ உண்மையை என்னிடம் மறைக்க முடியாது. நீ நேற்று இரவு, தண்ணீர் குடிக்கும் குவளையைத் திருடியதை நான் பார்த்துக் கொண்டேன். நீ வழக்கமாய் திருடிவருகிறாய் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்; எனவே நான் உன்னை என்ன செய்யப் போகிறேன், தெரியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அடிமைச் சிறுவன் பயந்து, "கலீபாவே, நான் திருடியது வாஸ்தவம்தான்; என்னைத் தண்டிக்காதீர்கள். எனக்கு ஒரு ஏழைத் தாய் இருக்கிறுள். அவளுக்கு ஏதும் வருமானம் கிடையாது. இங்கு நான் திருடும் பாத்திரத்தை விற்று அப்பணத்தை அவளுக்கு கொடுத்து விடுவேன்" என்று சொன்னுன்.

அதற்கு கலீபா மாமூன், அவன் மீது இரக்கப்பட்டு அவனுக்குச் சொன்னுர்:—

"அடே பையா! நீ நேற்றிரவு திருடிய பாத்திரத்தைக் கொண்டு வா. அதற்கு நான் தக்க விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்" என்று சொன்னுர்.

அவ்வாறே அவ்வடிமைச் சிறுவன் பாத்திரத்தைக் கொண்டு வந்து திருப்பிக் கொடுத்தான்.

"இதற்கு என்ன விலை வேண்டும்?" என்று கேட்டார் கலீபா மாமூன்.

"இதற்கு ஒரு (அஷ்ரபீ) பொன்காசு விலை வேண்டும்" என்று சொன்னுன் பையன்.

அதற்கு கலீபா, "இந்த குவளைக்கு ஒரு பொன்காசு தருகிறேன்; ஆனுல் இனி திருடுவதில்லை என்று நீ உறுதி கூறவேண்டும்., திருட்டுத் தொழிலை விட்டு விடவேண்டும், என்ன சொல்கிருய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், கலீபாவுடைய நல்ல சுபாவத்தையும் தயாள சிந்தையையும் தெரிந்து கொண்டு, சொன்னதாவது:

"ஹுஜூர்! நான் இனிமேல் திருடக் கூடாது, திருட்டுத் தொழிலை விட்டு விடவேண்டும் என்றிருந்தால், இந்த குவளைக்கு விலை 100-பொன் காசு கொடுக்க வேண்டும்" என்றுன்.

"ஒரு பொன்காசு பெறும் குவளைக்கு நூறு பொன்காசா? ஏன் அப்படி விலையை ஏற்றி விட்டாய்" என்று கேட்டார்.

அதற்கு அச்சிறுவன் "ஏன் என்ருல், இனி நான் திருடா திருந்தால், என் ஏழை தாயுக்கு உதவி செய்ய இயலாது. ஆகையால் ஒரே மொத்தமாய் 100-பொன்காசு கொடுத்து விட்டால், திருட வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை; என் தாய்க்கும் பணக்கவலை இராது" என்று சொன்னுன்.

கலீபா மாமூன் ரஷீத் அவனுடைய புத்திசாலித் தனத்துக்கு மெச்சி, அவனுக்கு 101-பொன் காசுகள் இனும் கொடுத்து உதவினுர்.

அப்புறம் அந்தப் பையன், எப்போதுமே திருடவில்லை.

சிறுவர்களே, கெட்டவனைத் திருத்த வேண்டுமானுல், கலீபாவைப் போல் தயாள குணத்தோடும், இரக்கத் தன்மையோடும் நடந்து கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டும்.

(38-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

# : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## நல்லோர்க்கு நல்ல பாக்கியங்கள் உண்டு.

(இறைவனிடம்) பாப மன்னிப்பு கோரி, நல்ல நம்பிக்கை கொண்டு, நன்மையான காரியங்களைச் செய்பவர்கள் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள். அங்கு அவர்கள் விஷயத்தில் சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டாது. (சுவர்க்கத்தில்) எப்போதும் ஆனந்தமும் உல்லாஸமும் உண்டாகும். இவ்வாறு (அளிக்கப்படுமென) அல்லாஹ் ஏற்கனவே வாக்களித்துள்ளான். நிச்சயமாக அவ்விறைவனுடைய வாக்குறுதி (நல்ல முறையில்) நிறைவேறியே தீரும். அங்கு ஸலாம் (சாந்தி) என்று கூறிக் கொள்வர். வீண் வார்த்தைகளை யாரும் பேச மாட்டார்கள். (சுவர்க்க வாசிகளான) அவர்களுக்கு காலையிலும் மாலையிலும், (அவர்கள் இஷ்டம் போல்) ஆகாராதி கிடைக்கும். இவர்கள் தான் சுவர்க்கத்துக்கு உரிமையாளர்கள். இறைவன், தன் அடியார்களில் யார் பயபக்தி உடையவராய் இருக்கிறார்களோ அவர்களுக்கு இதை ஏற்படுத்தி வைத்துள்ளான். (ஜுஸு: கால அலம்; ஸூரா: மர்யம்; ருகூ: 4)

## ஏழு வாயல்கள் உள்ளது கொடிய நரகம்.

(இறைவன், ஷைத்தானை நோக்கி, நரகத்தைப் பற்றி கூறியிருப்பதாவது:—) என்னுடைய நல்லடியார்களை நீ ஆதிக்கம் கொள்ள (அவர்களை வழி கெடுக்க) உன்னால் முடியாது. ஆனால் வழி கெட்டுப்போனவர்களே உனக்குப் பணிந்து நடப்பார்கள். இப்படிப்பட்டோருக்கு உறைவிடம் நரகமேயாகும். அதற்கு ஏழு வாயல்கள் உண்டு. ஒவ்வொரு வாயலுக்கும் ஒரு குறிப்பிட்ட வர்க்க பாபிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர்.

## சத்தியப் போரை விட்டு முஸ்லிம்கள் ஓடக் கூடாது.

(இஸ்லாத்தின் பாதுகாப்புக்காக, அகழ் வெட்டி, சத்தியப்போர் நடந்த நாளில், சில முஸ்லிம்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) உடன் ஒத்துழைத்து சேவை செய்தனர்; பல முஸ்லிம்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு, போர்க்களம் விட்டுப் போய் விட்டனர். இவர்களைப் பற்றி அல்லாஹ் கட்டளை இடுகிறான்):—

(ஏ நபியே) அவர்களை நோக்கிக் கூறுவீராக:— (ஏ மனம் திரும்பியவர்களே,) "நீங்கள் மாணமடைந்து விடுவோ மென்றோ, போர்க் களத்தில் கொல்லப்படுவோ மென்றோ பயந்து ஓடுகிறீர்கள். உங்களின் இந்த ஓட்டமானது, உங்களுக்கு (இம்மையிலோ, மறுமையிலோ) ஒரு பயனையும் தரமாட்டாது. நீங்கள் (எவ்வகையாலேனும்) தப்பித்துப்போய் விட்டாலும் சரியே, (இந்த உலக வாழ்வில்) கொஞ்ச காலம்தான் சுகம் (பிரயோஜனம்) அடைவீர்கள். (ஏ ஜனங்களே) அல்லாஹ் உங்களுக்குத் தீமை செய்ய வேண்டு மென்று நாடினால், (தண்டிக்கும்) அல்லாஹ்வை விட்டு உங்களைக் காப்பாற்றுவார் யார்? அல்லது உங்கள் மீது கருணை புரிபவர் யார்? (எந்த நிலையிலும்) அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு யாரும் உங்களுக்கு உதவியாளர் கிடைக்க மாட்டார். (ஜுஸூ: உத்லுமா; ஸூரா: அஹ்ஜாப்; ருகூ: 2)

## சுவர்க்க வாசிகளுக்குரிய சுகபோக சாதனம்.

(நல்ல அடியார்களுக்கு சுவர்க்கத்தில்) தங்கி யிருப்பதற்கு குளிர்ந்த பூங்காவனம் உண்டு. அதில் அவர்கள் (கௌரவத்தோடு) பிரவேசிப்பார்கள். அவர்களுக்கு ஆபரணங்களும் அணிவிக்கப் படும்; தங்கத்தினலான காப்புகளும், முத்துக்களும் தரப்படும். அங்கு அவர்களுக்கு பட்டாடைகளும் கிடைக்கும். (இதை யெல்லாம் பெற்று சுவர்க்க வாசிகள், ஆனந்தம் அடைந்து) "சகல புகழும் அல்லாஹ்வுக்கே உரியது, அவன் தான் எங்களை கவலையை விட்டும் காப்பாற்றி வைத்தான். நிச்சயமாக எங்கள் இறைவன் (நல்லடியார்களை) மன்னிப்பவனாகவும், கௌரவிப்பவனாகவும் இருக்கின்றான். இன்னும் அவன் தன் அருட் கொடை பாக்கியத்தால், சாஸ்வதமாக தங்குவதற்கு எங்களுக்கு இந்த இல்லத்தில் இடம் அளித்தான். இங்கு எவ்விதமான கஷ்டமும் நேரிடுவதில்லை; இங்கு எங்களுக்கு எந்த விதமான (சரீர, ஆத்ம) சோர்வும் ஏற்படுவதில்லை." என்று கூறுவர். (ஜுஸூ: வமன்யக்னுத்; ஸூரா: பாத்திர்; ருகூ: 4)

## சுவர்க்கத்தில் கிடைக்கும் மதுவில் போதை இல்லை.

அல்லாஹ் உடைய நல்லடியார்களுக்கு (சுவர்க்கத்தில்) குறிக்கப் பட்ட ஆகாராதிகள் கிடைக்கும். வகைவகையான கனிகளும் (அவர்களுக்குக் கிடைக்கும்.) சுவர்க்கத்தில் அவர்களுக்குத் தக்க கௌரவம் அளிக்கப்படும். அவர்கள் ஆஸனம் (பலகை)களில், எதிரெதிராக (ஒருவரை ஒருவர்) பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பர். பரிசுத்தமான மதுபானவகை (பருகுவதற்கு) தாராளமாக அளிக்கப் படும். அந்த மதுபானம் வெண்மை நிறமுடையதாய் இருக்கும்; குடிப்பவர்களுக்கு (இணையில்லாத) ருசியை அளிக்கும். அதைக் குடிப்பதால் தலையும் சுற்றாது; (அதில் போதை மயக்கம் கிடை

யாது.) அவர்களுடைய புத்தியும் பேதகமடைந்து விடாது. அவர்கள் அருகில் பெரிய (கீள்) விழிகளுடைய, நாணம் மிகுந்த கன்னியர்கள் அமர்ந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் (வெண் நிறத்தில் மிக வசீகரமாக பட்சிகள்) தங்கள் சிறகுகளில் மறைத்திருக்கும் முட்டை போல் (இணங்கி) இருப்பர். (ஜுஸு: வமாலிய; ஸூரா: வஸ்ஸாப் பாத்; ருகூ: 2)

## போர்க்களத்தில் விரோதிகளைச் சிறை பிடிக்கலாம்; கொல்லலாம்.

(முஸ்லிம்களே, இஸ்லாமிய தர்மப்) போர்க்களத்தில், உங்களுடைய (காபிரான) எதிரிகளுடன், மும்முரமான போர் தொடங்கி விட்டால், (யாதொரு தயாதாக்ஷண்யமின்றி) அவர்களை வெட்டிக் கொல்லுங்கள். அங்ஙனம் வெட்டிக் கொல்வது முடிந்து விட்டால், (மிச்ச முள்ளவர்களை) சிறைப் பிடித்து, கைகளை (இறுக்கிக்) கட்டி விடுங்கள். அதன் பிறகு அவர்கள் மீது உபகாரம் (தயை) செய்தோ, அல்லது தண்டப் பணம் வாங்கிக் கொண்டோ விட்டு விடுங்கள். அவர்கள் உங்கள் முன் (ஆயுதங்களை கீழே போட்டு) பணிந்து விடட்டும். இதுதான் (இறைவனுகிய) எம்முடைய கட்டளை. அல்லாஹ் இஷ்டப்பட்டால் பிறகும் அவர்களிடம் பழி வாங்குவான். எனினும் உங்களில் சிலரை சிலர் மீது ஏவி விட்டு, அவன் சோதிப்பது அவனுடைய இஷ்டத்திலுள்ள தாகும். (ஜுஸு: ஹாமீம்; ஸூரா: முஹம்மத்; ருகூ: 1)

## பால், மது, தேன் ஆறுகள் ஓடும் சுவர்க்கம்

பயபக்தியுடைய (நல்ல)வர்களுக்கு, (இறைவனால்) வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தின் வர்ணனை யாவது: அதில் துர்க்கந்தம் (எதுவும்) இல்லாத (சுத்தமான) தண்ணீர் (ஓடும்) நதிகள் உண்டு. எப்போதும் ருசி கெட்டுப் போகாத பால் (ஓடும்) நதிகளும் இருக்கும். குடிப்பவர்களுக்கு (போதை, மயக்க மின்றி) நல்ல ருசியைத் தரக் கூடிய மது (ஓடும்) நதியும் உண்டு. இன்னும் தூய்மையான (தெளிந்த) தேன் (ஓடும்) நதியும் உண்டு. அன்னவர்களுக்கு அங்கு, சகல விதமான கனிவகைகளும் கிடைக்கும். அங்கு (சுவர்க்கத்தில் இருப்பவர்களுக்கு) அவர்களுடைய இறைவனின் புறத்தி லிருந்து (பூரணமாக) பாப மன்னிப்பும் கிடைக்கும். அங்கு (சுவர்க்கத்தில்) வசிப்பவர்கள், நரகத்தில் கிடந்து உழல்பவர்களைப் போல் ஆய்விட முடியாது. (நரகத்தில் கிடக்கும்) இவர்களுக்கு, கொதிக்கும் (சீழ் கலந்த) ஜலம் (தாகத்தின் போது) அளிக்கப்படும், அது (வயிற்றுக்குள் போய்) குடல்களை அறுத்தெறிந்து விடும். (ஜுஸு: ஹாமீம்; ஸூரா: முஹம்மத்; ருகூ: 2)

## பொய் மொழியை நம்பி யாரையும் விரோதிக்க வேண்டாம்

(முஸ்லிம்களே) நம்பிக்கை கொண்டவர்களே, எவனேனும் (பாபியான) நயவஞ்சகன் உங்களிடம் ஏதேனும் செய்தி கொண்டு வந்தால், அதை நன்றாய் (மெய்யா, பொய்யா என்று) ஆராய்ந்து பாருங்கள். (அவசரப் பட்டு) அறியாமையினால் (அப்பொய்.மொழியை நம்பி) எந்த சமூகத்தாரையும் விரோதித்துக் கொள்ளாதீர்கள். ஏனெனில், (இதனால்) நீங்கள், உங்கள் செயலைப் பற்றியே வருந்துவீர்கள். (ஜுஸ்உ: ஹாமீம்; ஸூரா: ஹுஜ்ராத்; ருகூ: 1)

## சுவர்க்கத்தின் இணையில்லா இன்ப சுகபோகம்

நிச்சயமாக, பயபக்தியுடைய (நல்ல)வர்கள், (சுவர்க்கத்தில்) பூங்காவனத்தில் சுகானந்தத்தில் திளைத்து இருப்பர். இது அவர்களுடைய இறைவனால் அருளப்படுவதாகும். அவர்களை அவர்களுடைய இறைவன், நரகத்தி லிருந்து காப்பாற்றியது பற்றி சந்தோஷப் படுவார்கள். (ஏ பாக்யவான்களே,) நீங்கள் உலகத்தில் நல்ல காரியங்கள் செய்து வந்ததற்குப் பலனாக, இந்த பாக்யம் கிடைக்கிறது; நீங்கள் (இஷ்டம் போல்) உண்ணுங்கள்; பருகுங்கள். ஆஸனப் பலகைகளில், சரிசமமாக (எதிரெதிரே) அமர்ந்து, திண்டுத் தலையணையில் சாய்ந்துக் கொண்டிருங்கள்-" என்று அவர்களுக்கு (உபசாரம்) கூறப்படும்.

இன்னும் (இறைவனாகிய) நாம் அவர்களுக்கு பெரிய பெரிய (மான்விழிக்) கண்களுள்ள கன்னிகளை ஜோடிகளாக அளிப்போம். யார் (உலகில்) நன்னம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ, இன்னும் யாருடைய சந்ததியினரும் (நல்ல காரியங்கள் புரிந்து) அவர்களைப் பின்பற்றி நடக்கிறார்களோ, அவர்களால் எவ்வளவு பாபங்கள் நேர்ந்து போயிருந்தாலும் சரி, அவர்களுடைய சந்ததிகள், (தம் பெற்றோரான) அவர்களை சுவர்க்கத்துக்கு கொண்டு வந்து சேர்த்து விடுவர். சுவர்க்க வாசிகளுக்கு பிரதிபலன் அளிப்பதில் நாம் எத்தகைய குறைவும் செய்ய மாட்டோம். ஒவ்வொரு வரும் அவரவர் நடத்தைகளுக்குத் தக்கபடியே பயன் அளிக்கப் படுவார். (அவர்களின் நற்செயலால் தான் அவர்கள் மோக்ஷ மடைய முடியும்)

இன்னும் (சுவர்க்கத்தில்) அவர்கள் இஷ்டப்பட்ட அளவு கனி வகைகளும் மாமிசங்களும் கிடைக்கும். (இறைவனாகிய) நாம் சகல வித சந்தோஷத்தையும் அவர்களுக்கு அளிப்போம். அவர்கள் அங்கு பான வகைகளை (பரஸ்பரம்) தமக்குள் வாங்கியும் கொடுத்தும் குடிப்பார்கள் (போதை காரணமாக) தவறான பேச்சுகளை உளற மாட்டார்கள்; தகாத (அற்ப) காரியங்களையும் செய்ய மாட்டார்கள். அழகான (முகமுள்ள) சிறுவர்களும், அவர்களுக்குப் பணிவிடை புரிய அவர்கள் அருகில் வந்து போய்க் கொண்டிருப்பர்; அவர்கள் மூடிப்

பாதுகாக்கப்பட்ட முத்துக்கள் போலிருப்பர். (ஜுஸ்உ: காலபமா; ஸூரா: தூர்; ருகூ:1)

## பொய் வாதம் புரியாதீர்கள்

நம்பிக்கை கொண்ட முஸ்லிம்களே, உங்களால் செய்ய இயலாத விஷயம் பற்றி எதற்காக (வாதித்துச்) சொல்கிறீர்கள். உங்களால் செய்ய வியலாத விஷயம்பற்றி நீங்கள் (பொய்) வாதம் செய்வது அல்லாஹ்வினிடம் விரும்பத் தகாத தாகும். (ஜுஸ்உ: கதஸமிஅ; ஸூரா: ஸாப்; ருகூ: 1)

## திருடியவர்கள் கையை வெட்டி விடுவது உண்டு

நம்பிக்கை கொண்ட முஸ்லிம்களே, திருடுகிற ஆணையும், திருடுகிற பெண்ணையும் (ஊர் வழக்கப்படி) இருவரின் கைகளையும் வெட்டி விடுங்கள். இது அவர்களின் கெட்ட செயலுக்குத் தண்டனையும் அல்லாஹ்வின் எச்சரிக்கையுமாகும். அல்லாஹ் மிக மிகைத்தவன். விவேக முடையவன். யாரேனும் (அறியாமல்) பாபம் செய்து விட்ட பின்பு மன்னிப்பு கோரினால், இன்னும் திருந்திக் கொண்டால், அல்லாஹ் அவருடைய (பாப மன்னிப்பு) கோரிக்கையை (தவ்பாவை) ஏற்றுக் கொள்கிறான். (ஜுஸ்உ: லாயுஹிப்புல்லாஹ்; ஸூரா: அல் மாயிதா; ருகூ- 6)


## உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்தூவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப் பட்டுள்ளது. விலை ரூ. 3-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5

# சன்மார்க்க முரசு.

"மாஸ்டர் கமால்பாபு"

இந்துஸ்தானி இராகம் — ரூபக தாளம்

உல்லாச உலகம் உனக்கே சொந்தம் இசை:

'சமாதி' வணக்கம் 'நரகில்' தள்ளும்
மெய்யடா மெய்யடா மெய்யடா நீ யறிவாய்!

படைத்த 'நாயன்' அன்புடனிருக்க
பகுத்தறிவு இழந்து மடத்தனமாய்
பிள்ளையை கேட்பது புருஷனை கோருவது
பொருந்துமா நமக்கு சமாதியிலே!

இதுதான் அழகா நன்ருய் அறிந்து
சொல்லடா சொல்லடா சொல்லடா—நீ யறிந்து!

செய்பிழை பொறுக்கும் ஆண்டவனவனும்
'ஷிர்க்கை' மட்டும் பொறுக்கானே
சாகும் முன்பே நாயனை வேண்டி
செய்வாய் 'தவ்பா' சோதரனே

'சமாதி பக்தி' மனதில் இருந்தால்
தள்ளடா தள்ளடா தள்ளடா—இட்சணமே!

அல்லும் பகலும் அல்லாவை நினைத்து
அனுதினம் 'தொழுவாய்' மானிடனே
'அஹமத் நபி'யின் வழியில் சென்று
அழிப்பாய் அனுசாரம் அன்புடனே

'இறையோன்' அவனை மக்கள் வணங்கிட
செய்யடா செய்யடா செய்யடா—நீ நித்தம்!

கானில 'முஸ்லிம்' நலனை கருதி
'நீதி'யை எங்கும் நிலை நாட்ட
நன்மையை யேவி தீமையை விலக்கி
'நாயகம்' சேவை செய்திடுவாயே

"கமால்" கவியை சன்மார்க்க முரசாய்
கொட்டடா கொட்டடா கொட்டடா—நீ ஜோராய்!

---

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம் 22.

தோட்டத்தி லிருந்து வீட்டுக்குள் நுழைந்த போது கரீமுல்லா கான் உற்சாக மின்றிக் காணப்பட்டார். அறையில் சுவற்றில் மாட்டி யிருந்த படங்களைக் கரீம் ஷரீப் நோட்ட மிட்டுக் கொண் டிருப்பதைப் பார்த்தார். அருவருப்புக்குப் பாத்திரமான அம் மனிதனைப் பார்த்து அவர் அபாயகரமான அமைதியோடு கேட் டார்:

"நீ இங்கு திரும்பவும் வருவாய் என்று நான் நினைக்க வில்லை."

"நீ நினைக்க வில்லையா?" கரீம் ஆச்சரிய முற்றவனாகக் கேட் டான். "நான் திரும்பவும் வரமாட்டேன் என்று எப்படி, ஏன், எண்ணினாய்? காரியத்தை முடித்து விடுவதில் நான் ஆர்வம் காட்டு கிறேன். கரீமுல்லா, உனது போக்கு எனக்கு வியப்பு அளிக் கிறது."

"நீ எந்தக் காரியத்தையும் சரிப்படுத்த முடியாது. இந்த உண் மையை உணர்ந்து கொண்டு உடனே வெளியே கிளம்பி விடுவது எல்லோருக்கும் நன்மை பயக்கும்."

"எனக்குத் தெரிந்திருந்தால்," வெட்க மின்றி அங்கு நின்று கொண்டு அவன் ஆரம்பித்தான் "காதர்கான் கலியாணம் செய்து கொண்ட காரிகை உன் மகள் என்பதைக் கனவிலாவது கருதி யிருப்பேனானால், அக்கலியாணத்தை நான் தடுத்து நிறுத்தி யிருப்பேன். நேர்மையான முறையில் எனது மகன் வளர்க்கப் பெற் றான்; உன்னை அவன் பார்த்ததே யில்லை. நேர்மையான மனிதர்களி லெவரும் கரீமுல்லாவைச் சந்திக்கா திருப்பது விந்தையே யாகும். வாஸ்தவத்தில் என் மகன் தீயவனாக இருந்திருந்தால் உன்னை உடனே உணர்ந்து தெரிந்து கொண்டிருப்பான். தனது தந்தையைச் சிறைக்கு அனுப்பி வைத்த ஒருவனுடைய மகளை எனது மகன் மணந்து கொண்டிருப்பான் என்று நினைக்கிறாயா? அது சாத்தியமா? ஆயினும், காரியம் முடிந்து விட்டது. இப்போது அதைப் பற்றி வருத்தமோ அல்லது கவலையோ படுவதில் பயனில்லை. அவளும் அவன் மீது அன்பு கொண்டிருக்கிறாள்; அவனும் அவள் மீது அன்பு கொண்டிருக்கிறான்...."

"உனது ஹாஸ்ய நாடகத்தை நடித்து முடித்து விட்டதும் நீ வெளியே செல்லலாம். சாப்பிடுவதற்கு முன்பு நான் சந்தோஷமாகச் சிரிப்பதில்லை."

"ஆ! அப்படியா? சாப்பாட்டுக்குப் பிறகும் சந்தோஷமாகச் சிரிப்பதில்லையா? நான் நல்ல வேளையில் வரவில்லை போல் தோன்றுகிறது. இப்போது கவனி, நாம் விவகாரத்துக்கு வருவோம்."

"உன்னுடன் எனக்கு எந்த விவகாரமும் கிடையாது."

"அவசரம் உனது பலவீனமாக இருந்து வந்திருக்கிறது. ஆத்திர வசப்பட்டு அறிவை அடகு வைத்து விடாதே. நானும் ஒரு சமயம் ஆத்திரப்பட்டு அவஸ்தைப் பட்டிருக்கிறேன்; எனது ஆத்திரம் எனக்கு பதினைந்து வருட சிறை தண்டனை வாங்கித் தந்திருக்கிறது. நீ இங்கு இன்பமாக இரவும் பகலும் கழித்துக் கொண்டு கனவான்களுடன் பழகி உன்னை நேர்மையானவன் என அவர்கள் நினைத்துக் கொள்ளும்படி செய்து வந்த அந்த பதினைந்து வருடங்களில் நான் சிறையில் சித்திரவதைக் குள்ளாகி யிருந்தேன் என்பதை மறந்து விடாதே, உன்னிடம் ஒரு கைமாறு கோரப் போகிறேன்."

"நீ கேட்பதற்கு முன்பே அது கொடுக்கப்பட்டு விட்டது."

"என்னுடனும் எனது மைந்தனுடனும் நீயும் சிப்கத்துல்லாவும் விருந்துண்ண வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விவகாரத்தை இனிது முடித்துக் கொள்வோமாக. கோர்ட்டில் விவாக ரத்து வழக்குத் தொடர்ந்து உன் மகளைப் பிரபல்யப் படுத்த விரும்ப வில்லை அல்லவா? அவன் மணந்து கொண்டிருந்தாலும், இல்லா விட்டாலும் உன் மகளுக்கு விவாக ரத்து பெற விரும்புகிறாயா? வாஸ்தவத்தில் அவன் மணமானவன் அல்ல. ஜீனத்தை அவன் தகுந்த முறைப்படி, சட்டப்படி மணந்து கொண்டிருக்கிறான் என்று நினைக்கு மளவுக்கு நீ அறிவிலியாக இருப்பாய் என்று நான் நினைக்க வில்லை. ஜீனத்தைப் போன்ற பெண்கள் இப்படித் தான்பறை சாற்றிக் கொள்வார்கள். அது மனிதருக்குள்ள குறைபாடு."

"அது அவர்களது மணப் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்ட கத்தீபு சாஹிபின் பலவீனம் போலும், அல்லது அந்த திருமணத்துக்குச் சாக்ஷிகளாக இருந்தவர்களின் பலவீனம், குறைபாடு போலும்! ஜீனத்தைச் சட்டப்படி, சாக்ஷிகள் முன்பு உனது மகன் மணந்து கொண்டிருக்கிறான். எனக்கு அந்த உண்மை தெரியாது என்று மனப்பால் குடிக்கிறாயா?"

இன்னும் கரீம் ஷரீப் விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

"நீ புத்திசாலி அப்பா" அவன் புகழ் பாடினன். "குற்றம் செய்வதில், மோசம் புரிவதில் நீ சுறுசுறுப் புள்ளவன் அல்லவா? எனது மகன் மணமானவனுக இருந்தாலும் இல்லா விட்டாலும், விவாக ரத்து பெறுவதற்காக உனது மகள் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதை முதலில் உணர்ந்து கொள். அவ்வாறு விவாக ரத்து பெறும் வரை அவள் கலியாணம் செய்து கொள்ள முடியாது. இருதார மண தடைச் சட்டத்தின் படி எனது மகன் ஏற்கனவே மணமானவன் என்பதை நிருபிக்கும் வரை உனது மகளுக்கு விவாக ரத்து கிடைக்காது. உனது முட்டாள் தனத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ள விரும்புவாய் என்று நான் நினைக்க வில்லை. எனது புத்தி மதியின்படி நடந்து கொள். என்னுடன் வந்து விருந்துண்டு விவகாரத்தை விவாதம் மூலம் தீர்த்துக் கொள். உன்னுடன் சிப்கத்துல்லாவையும் அழைத்துவா."

"சிப்கத்துல்லாவையும் நான் ஏன் அழைத்துக் கொண்டு வர வேண்டும்? என்னை நான் கவனித்துக் கொள்ள முடியும்."

"இவ்விவகாரத்தில் சிப்கத்துல்லாவும் சம்பந்தப் பட்டிருக்கிறுன்; அதில் அவனுக்கு அக்கரையும் உண்டு. மரியமைப் பற்றிய எந்த விவகாரத்திலும் அவன் அக்கரை கொண்டிருக்கிறுன் என்பது அனைவரும் அறிந்த விஷயம்."

"உன்னுடன் மரியமின் விவகாரம் குறித்து நான் விவாதிக்க விரும்ப வில்லை. உன்னையும் உனது மகனையும் நான் வந்து பார்க்கிறேன். உங்கள் இருவரையும் சிப்கத்துல்லா சட்டை செய்வான் என்று நான் நினைக்க வில்லை. சட்டத்தின் மூலம் சாதிக்க முடியாததை உன்னுல் எவ்வாறு திருப்திகரமாகத் தீர்க்க முடியும் என்பது தான் எனக்கு விளங்க வில்லை"

"வேறு எந்த வழியிலும் பரிகாரம் காண்பதற்கு முடியாது என்பதை ஆதாரபூர்வமாக என்னுல் நிரூபிக்க முடியும். உண்மையை உரைக்க வேண்டுமானுல் எனது அப்பாவி மகன், தான் செய்திருக்கிற தவறை உணர்ந்து கொண்டு விட்டான். கண்ணிய மிக்க கனவானின் கனிஷ்ட புத்திரியைக் கலியாணம் செய்து கொண்டதாக அவன் கருதிக் கொண்டிருந்தான். அவனிடம் நான் உண்மையை உரைத்த பொழுது அவன்உ ள்ளம் கலங்கினுன். முதலில் உண்மையை சொல்லாதது பற்றி என்னை அவன் கடிந்து கொண்டான்"

"எந்த வினேத விவகாரத்தை எப்படி முடிக்கப் போகிருயோ என்பது எனக்குத் தெரிய வில்லை. ஆனுலும், நான் பயந்து ஓடி விடப் போவதில்லை. உன்னையும் உனது மகனையும் நான் சந்திக்க வேண்டு மென விரும்புகிருயா? எங்கே சந்திப்பது?"

"கிளப் இன்ஸானியத்தில் நாம் சந்தித்தா லென்ன? சமீபத்தில் துக்ககரமான சம்பவ மொன்று நிகழ்ந்த எட்டாம் எண்ணுள்ள அறையை நமது சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொள்வோம்"

"அந்த அபசகுண அறையில்தானே நீ உனது மகனைச் சுட்டுப் படுகாயப் படுத்தினுய்........"

"எனது மகனையே நான் சுட்டேனு, அப்படியா சங்கதி. கரீமுல்லா, வயோதிகத்தின் காரணமாகப் பல் இழந்து விட்ட நீ சொல்லும் இழந்து வருகிருய். நீ கனவு காண்கிருய் போலும்! எனது மகனை நான் சுட்டேனு?"

"உனது முட்டாள்தனமான, கபட எண்ணத்துடன் கூடிய விருந்துக்கு நான் வருகிறேன்"

"மரியமையும் அழைத்து வருகிருயா?"

"கிளப் இன்ஸானியத்தின் வாசலில் மரியம் அடியெடுத்துக் கூட வைக்க மாட்டாள். அவள் அவ்வாறு செய்வதை அனுமதிக்கு மளவுக்கு நான் அறிவிலி அல்ல. சிப்கத்துல்லாவும் விருந்துக்கு வருவான் என்று உறுதி அளிக்க முடியாது- ஆனுல், நான் வருகிறேன்"

"வெள்ளிக்கிழமை சௌகரியமான நாளா?"

"எந்த நாளும் எனக்குச் சௌகரியமானது தான். எந்நேரத்தில் நாங்கள் வர வேண்டு மென விரும்புகிருய்?"

"ஜும்ஆவுக்குப் பிறகு. 2-30 மணிக்குச் சந்திக்கலாம். சிற்றுண்டிக்குப் பிறகு சம்பாஷணை நிகழ்த்தலாம். சம்பாஷணை சந்தோஷமாக நிகழ்வதற்கு வசதியாக சிறு விருந்து, அவ்வளவுதான். சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு பாங்க் கொள்ளை நடந்துவதற்குச் சில தினங்களுக்கு முன்பு நாம் விருந்துண்டது நினைவிருக்கிறதா? அந்த விருந்தின் போது, கொள்ளைக்கான ஆயத்தங்களையும் ஏற்பாடுகளையும் நாம் பேசி முடித்தோம் அல்லவா? பிறகு நீ பிறழ்ந்து விட்டாய். என்னைச் சிறை புகச் செய்து விட்டு நீ சிங்கார மாளிகையில் சுகம் அனுபவித்தாய். பத்து லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்ட நீ ஒரு லட்சத்து இருபதினுயிரம் ரூபாய் என்று தானே சொல்கிருய்?"

இந்த சமயம் கரீமுல்லாகான் கதவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் தலையசைத்தது கரீம் ஷரீப் வெளியேற வேண்டும் என்று சமிக்ஞை செய்வதா யிருந்தது.

"இவ்விவகாரத்தை முடித்துவிட விரும்புகிறேன்" அவனது பேச்சைக் கேட்டு அவர் ஏமாந்து விடவில்லை. "கரீமுல்லா, நான் வயோதிகனுகி விட்டேன். நான் வெளி நாடு சென்று காலம்

கழிக்க விரும்புகிறன். என் மகனேயும் என்னுடன் அழைத்துச் செல்ல வேண்டு மென்பது என் விருப்பம். அவனுக்கொரு வாய்ப்பு அளிக்கவும் ஆவலுள்ளவனுக விருக்கிறேன்—அவனேப் போன்ற நல்லெண்ண மிக்கவனுக்கு ஒரு வாய்ப்பு அளித்துத்தான் ஆக வேண்டும். உன்னிடம் நான் உண்மையைக் கூறி விடுகிறேன்—அவன் ஒண்டிக் கட்டை”

கரீமுல்லாகான் சிரித்துக் கொண்டார்.

“நீ சிரிக்கலாம். அவன் ஜீனத்தை மணந்தான்—அதற்கு அத்தாட்சி வைத்திருக்கிருய், ஆனல், விவாக ரத்து பெற்றோரின் ஜாபிதாவைப் பார்த்தாயா? அவ்வாறு செய்திருந்தால், நான் சொல்வதைக் கேட்டு நீ சிரித்துக் கொண்டிருக்க மாட்டாய். அவர்களிருவரும் மணம் செய்து கொண்ட பிறகு ஒரு வருஷத்துக்கெல்லாம் விவாக ரத்து செய்து கொண்டனர். பிறகு கரம் பிடித்த மற்றொருவனிடமும் சலிப்புக் கொண்டு திரும்பவும் காதர்கானிடம் வந்து சேர்ந்தாள். நீ உளவறிபவனல்லவா? இந்த விஷயத்தையும் கோட்ட மிட்டுப் பார். அல்லது, ரஜாக்கானைக் கேட்டுப் பார்”

“அவரை நீயே கேட்டுத் தெரிந்து கொள். அவர் தோட்டத்தில் உலவிக் கொண்டிருக்கிருர்”

அவர் அவ்வாறு கூறிவிட்டு அதற்காக வருத்தப்பட்டார். சிறிது நேரம் கரீம் சரீப் மௌனமாக இருந்தான்.

“ரஜாக்கான் இங்கு இருந்து கொண்டிருக்கிருரா? இரகசியத்தை அம்பலப்படுத்த வேண்டு மென அவர் வற்புறுத்தினரா? ஆனல் உன்னல் அவ்வாறு செய்ய முடியாது, ஏனென்னில் உனக்குத்தான் இரகசிய மெதுவும் தெரியாதே. அவர் என்ன கேட்கிருர்?

“அவரையே நீ ஏன் கேட்டுத் தெரிந்து கொள்ள லாகாது?”

“மற்றவர்களின் தோட்டங்களில் உலவிக் கொண்டே அந்த ஆசாமி வாணுள் முழுதும் கழித்து வருகிருர். நேற்று எனதுதோட்டத்தை அவர் சுற்றிப் பார்த்தார். உன்னிடம் அவர் இவ்விஷயத்தைச் சொல்லி யிருப்பார், என்று எண்ணுகிறேன். இப்போது தான் தேறிவரும் காதர்கானே மரணுவஸ்தைக் குள்ளாக்கினர். ஆனல் நீ துப்பரிவோரிடம் எப்போதும் அன்பாகவே, பிரியமாகவே இருந்து வருகிருய் அல்லவா? உனது பழைய நண்பர் இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாகான் எப்படி இருக்கிருர்? சரி, வெள்ளிக்கிழமை உனக்குச் சௌகரியமான நாள்தானே? அப்படி யானல், இன்னும் ஆறு தினங்கள் இருக்கின்றன.”

“ஆம், வெள்ளிக்கிழமை எனக்குச் சௌகரியமான நாள். உனக்கும் சௌகரியமானது தானே?”

தோட்டத்திற்கு வந்து ரஜாக்கானிடம் நடந்த விஷயங்களனைத்தையும் அவர் விவரித்தார்.

"கரீம் ஷரீப் வெளியில் காட்டிக் கொண்டபடி யன்றி நயவஞ்சகன். அவனது இந்த ஏற்பாட்டில் ஏதோ சூது இருக்கிறது என்று அஞ்சுகிறேன்" ரஜாக்கான் வருத்தத்தோடு சொன்னார். விவாகரத்து எதுவும் கிடையாது. இந்த விவகாரத்தில் மிகுந்த சிரத்தை கொண்டிருப்பதால் எனக்கு உண்மை நன்கு தெரியம். கிளப்பில் நிகழவிருக்கும் விருந்து சுவாரஸ்யமானது என்று நினைக்கிறேன். என்னை அவன் அழைக்க வில்லையா?" அவரது பேச்சில் நகைச் சுவை தென்பட்டது.

(தொடரும்)


தற்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா அவர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

## ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச் சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3-80

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப் பட்டுள்ளன.

115 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஹ்மத் பாகவி))

## தராவீஹ் ரக்கஅத்துகள் எத்தனை?

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தராவீஹ் தொழுகையை பல விதங்களில் தொழுதார்கள் என்பது ஸ்தாபிதமாகிறது. சில சமயங்களில் ஆறு ரக்கஅத்துகளாக தராவீஹையும், சில சமயங்களில் ஒன்று அல்லது மூன்று ரக்கஅத்துகளாகவும் சில சமயங்களில் ஐந்து ரக்கஅத்துகளாகவும் வித்ரு தொழுகையையும் தொழ வைத்திருக்கிறார்கள். இன்னும் சில சமயங்களில் எட்டு ரக்கஅத்துகளை தராவீஹாகவும், சில சமயம் ஒரு ரக்கஅத்து அல்லது, மூன்று ரக்கஅத்துகள், சில சமயம் ஐந்து ரக்கஅத்துகளை வித்ராகவும் தொழுது இருக்கிறார்கள். இன்னும் சில சமயங்களில், தராவீஹை பத்து ரக்கஅத்துகளாக—ஐந்து ஸலாம்களுடன் தொழுது இருக்கிறார்கள். மேலும், அவற்றுடன் ஒரு ரக்கஅத்து அல்லது மூன்று ரக்கஅத்துகள் வித்ரும் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இன்னும், சமயா சமயங்களில் பன்னிரண்டு ரக்கஅத்து தராவீஹையும் ஒரே ஒரு ரக்கஅத்து வித்ரையும் தொழுது இருக்கிறார்கள். சில சமயம் ஒரே நிய்யத்து கொண்டு ஒன்பது ரக்கஅத்துகளைத் தொழுது இருக்கிறார்கள். இன்னும், இதே விதமாகத் தொழுது, எட்டாவது ரக்கஅத்தில் உட்கார்ந்து 'அத்தஹிய்யாத்' ஓதுவார்கள். பிறகு எழுந்து நின்று ஒரே ஒரு ரக்கஅத்தை தொழுதுவிட்டு ஸலாம் திரும்பி விடுவார்கள். சில சமயங்களில் திருநபி (ஸல்) அவர்கள் இரவில் பத்து ரக்கஅத்துகளை ஐந்து ஸலாம்களுடன் நிறைவேற்றுவார்கள். அதன் ஒவ்வொரு ரக்கஅத்திலும், இரண்டிரண்டு ஸூராக்களை ஓதுவார்கள். அத்துடன் ஒரு ரக்கஅத்தை வித்ராக நிறைவேற்றுவார்கள். அதன் பிறகு (தாமதித்து) இரண்டு ரக்கஅத்துகள் பஜ்ருடைய ஸுன்னத்தையும் சேர்த்து மொத்தம் பதின்மூன்று ரக்கஅத்துகளை பூர்த்திப் படுத்தியுள்ளார்கள்.

* நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது: இரவுத் தொழுகையானது இரண்டிரண்டு ரக்கஅத்துகளாகும். (இவ்வாறு தொழுது) ஸுப்ஹு நேரமாய்விட்டால்

---

* ஸஹீஹைன், மிஷ்காத்

ஒரு ரக்கஅத்து மட்டும் தொழுது முடித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் எல்லாத் தொழுகையும் வித்ராகி விடும். மேலும், தஹஜ்ஜுதையும் தராவீஹ் தொழுகையையும் இரவின் கடைசி நேரத்தில், தம்தம் வீடுகளிலேயே தொழுதுக் கொள்வது மிகவும் சிரேஷ்டமானதாகும்.

## தொழுகையில் குர்ஆன் ஷரீப் திலாவத்

÷தராவீஹ் தொழுகையில் குர்ஆன் ஷரீபை எவ்வளவு ஓதினாலும் அது சிறந்ததாகும்.

×"யாரேனும் ஒருவன், மூன்று நாளைக்கும் குறைவான காலத்தில், குர்ஆனை ஓதி முடிப்பானானால் அவன் எதையும் உணர்ந்து கொண்டவனாகமாட்டான்" என்று நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

+நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது: ஏழு நாட்களில் குர்ஆன் ஷரீபை ஓதி முடிவு (கத்தம்) செய்து கொள்வீர்களாக.

‡யாருக்கேனும் குர்ஆன் ஷரீப் நன்றாக ஞாபகத்தில் இருந்தால் அவர் 'லவ்ஹுல் மஹ்பூலை'ச் சேர்ந்த மாபெரும் மலக்குகளுடன் உயர் பதவி பெற்றவராய் இருப்பார்.

*யாரேனும் குர்ஆன் ஷரீப் மொழிகளை, தயங்கித் தயங்கி (நிதானமாக) ஓதுவாரானால், மற்றவர்களைக் காட்டினும் இரண்டு பங்கு நன்மை (தவாபு) பெறுகின்றார்.

†தராவீஹ் தொழுகையில் குர்ஆன் ஷரீபை அதிகமாக ஓத வேண்டும். நின்றுகொண்டே (அதிகம்) ஓதுவதற்கு கஷ்டமாய் இருந்தால் இமாம் ஸாஹிப், உட்கார்ந்து கொண்டே ஓதலாம். அங்ஙனம் ஓதி முடிவாகும் தருணத்தில் எழுந்திருந்து ருக்கூஃ செய்யலாம்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது: தேக நிலை சரியாக இருக்கும் வரைக்கும் தொழுகையில் ஈடுபட்டிருப்பீர்களாக. அப்படி சோம்பலோ, பலஹீனமோ மிகைத்து ஏற்படுமானால், உட்கார்ந்து கொள்வீர்களாக.

தொழுகையின்போது முக்ததிகள், உட்கார்ந்து குர்ஆன் ஓதுதலை கேட்டுக் கொண்டே இருந்து, ருக்கூஃ செய்கிற சமயத்தில் எழுந்து நின்று சேர்ந்து கொண்டால், அதனாலொன்றும் குற்றமில்லை.

---

÷ முஸ்லிம், மிஷ்காத்
× திர்மதி, அபூதாவூத், தாரமீ, மிஷ்காத்
+ ஸஹீஹைன், மிஷ்காத்
‡ முஸ்லிம், மிஷ்காத்
* அபூதாவூத், மிஷ்காத்
† முஸ்லிம், மிஷ்காத்

பர்லான தொழுகைக்குப் பிறகு, தஹஜ்ஜுதைவிட சிறந்ததும் மேன்மையானதுமான தொழுகை வேறெதுவுமில்லை. ஆண்டவன் உங்களுக்கு சௌகர்ய பாக்கியம் அருள் புரிந்திருந்தால், இந்தத் தொழுகையை கட்டாயம் நிறைவேற்றுவீர்களாக.

ஹஜ்றத் ஆயிஷா (ரலி) திருவுளமா யிருப்பதாவது: "நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஏழு ரக்கஅத்துகளைவிடக் குறைவாகவோ, பதின்மூன்று ரக்கஅத்துகளைவிட அதிகமாகவோ ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையையும் தராவீஹ் தொழுகையை யும் நிறைவேற்றியதில்லை. பஜ்ருடைய ஸுன்னத்தும், வித்ரும் இதில் அடங்கி யிருக்கின்றன.

தராவீஹ் தொழுகை இருபது ரக்கஅத்துகள்தான் என்று குறிப் பான முறையில் (முடிவு செய்து) எந்த ஸஹீஹான ஹதீதிலும், நம் பத்தகுந்த ரிவாயத்துகளில் வரக்காணேம். ஆனால், ராஷிதீன் கலீ பாக்களுக்குப் பிறகு சில ஸஹாபாக்களும், தாபிஈன்களும் பதின் மூன்று ரக்கஅத்துகளைவிட அதிகமாகவே தொழுதார்கள் என்பது, ஸ்திரமா யிருக்கிறது என்ற விஷயத்துக்கு ஆதாரம் கிடைத்திருக் கிறது.

× ஹஜ்றத் ஜாபிர் (ரலி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன், ளுஹர் தொழுகை நிறைவேற்றிக் கொண்டிருந் தார்கள். அப்போது, பூமி (மணல்) மிகச் சூடாக யிருந்ததால், மணலை கையில் அள்ளி குளிரச் செய்து அதை ஸஜ்தா செய் யும் இடத்தில் போட்டுக் கொண்டு, அதன் மீது ஸஜ்தா செய் வார்கள்.

÷ யாரேனு மொருவர், வீட்டுக்குள் தொழுதுக் கொண்டிருக்கும் போது, இதர வெளி நபர் யாரேனும் வந்து, அவர் தொழுவது தெரி யாமல், வெளியே இருந்து குரல் கொடுத்துக் கூப்பிட்டால், அப் போது, தொழுதுக் கொண்டிருப்பவர் "ஸுப்ஹானல்லாஹ்" என்று மட்டும் சொல்லி, அவருக்குத் தகவல் கொடுப்பது ஜாயிஸ் ஆகும். தொழுதுக் கொண்டிருக்கும் பெண் பிள்ளை கூப்பிடப் பட்டால், அவள் (வாய் திறந்து ஏதும் சொல்லாமல்) கைதட்டி சமிக்ஞை செய்யலாம்.

(விளக்கு இல்லா விடில்) வீட்டுக்குள் இருட்டில் தொழுதுக் கொள்வது ஜாயிஸ் ஆகும்.

* தொழுதுக் கொண்டிருக்கும் போது, கொட்டாவி வந்தால், இயன்ற மட்டும் அதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். அங்ஙன

---

× அபூதாவூத், நஸாயி, மிஷ்காத்
÷ ஸஹீஹைன், மிஷ்காத்
* முஸ்லிம், மிஷ்காத்

87027.

மின்றி, வாயிலிருந்து "ஹா" என்பது போன்ற சப்தத்தை எழுப்பக் கூடாது. ஏனெனின், அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் ஷைத்தான் வாயுக்குள் நுழைந்து கொண்டு சிரிப்பான்.

+ தொழுதுக் கொண்டிருப்பவர்க்கு தும்மல் வந்து அவர் "அல் ஹம்து லில்லாஹி ஹம்தன் கதீரன், தய்யிபன் முபார(க்)கன் பீஹி–" என்று மெல்ல ஓதினுல் அதனுல் குற்ற மொன்று மில்லை. இதனுல் அவனது தஸ்பீஹில் நன்மை அதிக முண்டு.

யாரேனு மொருவர், தொழுதுக் கொண்டிருப்பவர்க்கு ஸலாம் சொன்னுல், உள்ளங்கை கொண்டு, பூமியின் மீது சமிக்ஞை செய்து விடுவது ஜாயிஸ் ஆகும்; ஆனுல் வாய் திறந்து அந்த ஸலாமுக்கு ஜவாப் சொல்வது கூடாது; ஜாயிஸல்ல.

தொழுகையின் போது எப்போதும், ஸஜ்தா செய்யு மிடத்தை யே நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

---

+ திர்மிதி, அபூதாவூத், நஸாயி, மிஷ்காத்


# முதல்லல் கோஷா நாமா

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ் தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவை களில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி **முதல்லல் கோஷா நாமா** வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப்பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக் கின்றன.

இதன் விலை ரூ. 0–52

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 0–80

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

[10]

இந்த வெளிச்சம் பற்றி எழுதியபோது "நியூயார்க் டைம்ஸ்" கூறியதாவது; மனிதனொருவன் மணிக் கணக்கிலே உபயோகித்த போதிலும் தன்னைச் சுற்றி செயற்கை விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியாத வகையில் அவ்வளவு இயற்கையாக அமைந்திருந்தது அந்த விளக்கு ...... மென்மையாகவும் மிருதுவாகவும் இருந்த அது கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தது, பட்டப் பகல் போலவே காட்சி யளித்தது ...... தலைவலி ஏற்படுத்தக் கூடிய உஷ்ணமும் இல்லா திருந்தது.

எடிசனின் பகீரத முயற்சி வெற்றி பெற்றுக் கைமேல் பலனளிக்க ஆரம்பித்தது.

அதிக லாபத்துக்கு ஆசைப்படுவதால் வியாபாரத்தில் போட்டி ஏற்பட ஏது இருப்பதால் புதிதாகக் கண்டு பிடிக்கப் படும் ஒவ்வொரு சாமானும் சாதனமும் கூடுமானவரை குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும் என எடிசன் கருதினார். எனவே, எதிர் காலத்தில் எண்ணம் வைத்து, சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விளக்கை நாற்பது செண்டுக்கு விற்க ஆரம்பித்தார். ஒரு விளக்கு செய்து முடிக்க ஒரு டாலர் முப்பது செண்ட் செலவான போதிலும் ஆரம்பத்தில் நஷ்டத்துக்கே அவர் விற்பனை செய்யலானார். கஷ்டப்பட்டு பரிசோதனை செய்து உற்பத்திச் செலவை நாற்பது செண்டாக அவர் குறைத்தார். விளக்குத் தொழிற் சாலையிலுள்ள தமது எல்லா சாமான்களையும் சுமார் பத்து லட்சம் டாலருக்கு அவர் விற்றுவிட்டார். எடிசனிட மிருந்து மின்சார விளக்குத் தொழிலை மேற்கொண்ட இக்கம்பெனி பின்னர் "ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனி"யாக மாறியது. வியாபார நுட்பம் தெரிந்த வியாபாரியாக இருந்தாலும்கூட, லாபம் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் வழக்கத்தை அவர் வெறுத்தார்.

ஒரு திட்டம் வெற்றிகரமாக இயங்கத் துவங்கியதும் அதில் அவர் செலுத்திய அக்கரையும் குறைந்து விடுவது வழக்கம்.

முதல் மின்சார விளக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய இரு ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் மனைவி மேரி திடீரென டைபாயிட் ஜுரத்தால் காலமானார். துயரமிகுதியால் மென்லோ பார்க்கிலுள்ள தமது வீட்டையும் ஆராய்ச்சிக் கூடத்தையும் எடிசன் மூடிவிட்டார். நியூயார்க்கிலுள்ள தமது மாமியார் வீட்டிற்குத் தமது மூன்று குழந்தைகளையும் அவர் அனுப்பி விட்டார். அவரது குடும்பவாழ்க்கை இன்பமயமாக இருந்தது.

இப்போது, தமது பழைய நினைவுகளை மறப்பதற்காக வேலையிலவர் மும்முரமாக முனைந்தார்.

திட்டங்களைத் தீட்டுவதில் தீரரான அவர் தமது முப்பதாவது வயதில் பல வழிகளிலும் தமது அபார, அசாதாரண அறிவை அவர் வெளிப்படுத்தினர். மின்சார விளக்கு பூற்றிப் பரிசோதனை நடத்திக் கொண்டிருந்த போது கூட பழங்களைப் பத்திரப் படுத்திப் பாதுகாப்பதற்கான வழியைக் கண்டு பிடித்து, அம்முறை பற்றிய ஏகபோக உரிமை பெற்றிருந்தார். அந்தக் காலத்தில் அவர் எழுதி வைத்திருந்த குறிப்புப் புத்தகங்களில் இப்போது ஹெலிகாப்டர் என அழைக்கப்படும் சாதனம் பற்றிய படங்கள் காணப்படுகின்றன. அது மிகப் பத்திரமானதும் பிரயோஜனமானதுமான விமானப் போக்குவரத்து சாதனம் என்பதை அவர் எடுத்துரைத்தார்.

மென்லோ பார்க்கிலே பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய முதல் மின்சார ரயில் வண்டியை இயக்கவும் துவங்கினர். பருத்தி அறுவடை செய்யும் கருவியும் மின்சாரத்தால் இயங்கும் தைக்கும் இயந்திரமும் உயரே தூக்கிச் செல்லும் மின்சார லிப்டும் பனிக் கட்டிகளை அகற்றும் புதுவித கருவியும் தயாரிப்பதற்கான திட்டங்களையும் அவர் தீட்டினர். எடிசனின் பேசும் பொம்மை முதலியவை பற்றிய விளம்பரங்களைக் கண்டு சில சமயங்களில் "எடிசன் எலெக்டிரிக் லைட் கம்பெனி" டைரக்டர்கள் கலக்க மடைந்ததுண்டு. இத்தகைய சாமான்களைச் செய்வது கௌரவக் குறைவான தென்றும் இதனல் பங்குகள் விற்பனை பாதிக்கப்படலா மென்றும் அவர்கள் கூறினர். தமது மூளையைக் கட்டுப் படுத்துவது கடினம் என்பதை கண்டு கொண்ட எடிசன் தமது திட்டங்களை நிறைவேற்றுவதில் முழு கவனம் செலுத்தி வந்தார்.

வாழ்க்கை வளம் பெறச் செய்வதற்கான வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதில் உறுதி கொண்டிருந்த அவரை இந்த இருபதாவது நூற்றூண்டில் வாழ்பவர் மறக்க முடியாது. 1875-ம் வருடத் துவக்கத்திலேயே ஒப்புயர்வற்ற மின்சார 'சக்தி' இருப்பதாகக் கண்டு பிடித்தார். (இச்சக்தியானது திறந்த வெளியிலே மின்சார அலைகளால் உண்டாக்கப்படுகிறது என்பது பின்னர் ஒப்புக் கொள்ளப் பட்டது.) இதை அவர் பரிசோதித்துப் பார்த்தார். பின்னர், இதர விஷயங்களில் அவர் கவனம் செலுத்தலானர். பரிசோதனையின் மூலம் தாம் கண்டறிந்த உண்மைகளை மார்கோனிக்கு அவர் தெரிவித்தார். அச்சமயத்திலே அந்த விஞ்ஞானி கம்பியிலாத் தந்தி முறையை ஏற்படுத்தும் விஷயத்தில் மற்றவர்களுடன் போட்டி யிட்டுக் கொண்டி ருந்தார். எடிசனின் உதவியைப் பெற்ற மார்கோனி எப்போதும் அவரிடம் நன்றிய்றித வுள்ளவராகவே நடந்து கொண்டார்.

சுடர்விட்டுப் பிரகாசிக்கும் விளக்கின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, மற்றொரு

புரட்சிகர சாதனத்தையும் அவர் கண்டு பிடித்தார். இச்சாதனத்தைக் கொண்ட பல்பு ஒன்று செய்து, அதன் மூலம் ஒப்புயர்வற்ற முறையிலே மின்சார ஓட்டத்தைக் கட்டுப்படுத்தினர். கம்பியிலா தந்தியில் அதனை உபயோகிப்பதற்கான முறையை உருவாக்கி, அது சம்பந்தமான ஏகபோக உரிமையையும் பெற்றார். அவர் ஏற்படுத்திய கம்பியில்லா தந்தி முறை சொற்ப தூரம் வரைதான் சுமுகமாக இயங்கியது; தூரப் பிரதேசங்கள் விஷயத்தில் அது வெற்றியளிக்கவில்லை. ஆயினும், லீஹய் பள்ளத்தாக்கு ரயில் பாதையை இயக்குவதற்குச் சிலகாலம் அது உபயோகப் படுத்தப்பட்டது.

சுமார் அரை நூற்றுண்டுக்குப் பிறகு எடிசனின் பல்புகள் ஒரு ரேடியோ செட்டுடன் இணைக்கப்பட்டன. இக்கால ரேடியோ வால்வ்போல அது இயங்கியது. ஆகவே, அவரை அறியாமலேயே எடிசன் ரேடியோ வால்வ் கண்டுபிடித்து விட்டார். டெலிபோன் செய்தியனுப்பும் கருவி (Telephone Transmitter) பற்றிப் பரிசோதனை நடத்திக் கொண்டிருந்த போதே ஒரு உப கருவியாக தொனி பெருக்கி (Micro phone) கண்டு பிடித்து விட்டார். இப்போது அவர் ரேடியோவை கண்டு பிடிக்கும் நிலையில் இருந்தார். இந்நிலையில், மற்ற விஷயங்களில் அவர் கவனஞ் செலுத்தி அவரது கண்டுபிடிப்புகளை மற்றவர்கள் அபிவிருத்தி செய்து அனுகூலம் அடைய விட்டு விட்டார்.

தமது மனைவியின் மரணத்தால் ஏற்பட்ட துயரம் நீங்கியதும் ஆறுதல் பெறுவதற்காகச் சமயா சந்தர்ப்பங்களில் சமூக வைபவங்களில் அவர் கலந்து கொள்ள ஆரம்பித்தார். சில விருந்து அழைப்புகளை ஏற்றுக்கொண்டார். தமது இளைய புதல்வியுடன் நடனங்களுக்கும் நாடகங்களுக்கும் விஜயம் செய்தார். பியானோ (Piano) வின் சுரங்களைத் தெரிந்து கொண்டு அதை வாசிக்கவும் அவர் கற்றுக் கொண்டார்.

1885-ம் வருடம் ஒருநாள் மாலை நண்பரொருவரின் வீட்டிலே விருந்துக்குப் பிறகு இருபது வயதுக் காரிகை யொருத்தி பியானோ வாசித்துப் பாட்டு பாடத் துவங்கினாள். பின்னர், நண்பரொருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது எடிசன் கூறியதாவது: "அவளது அழகு என்னைக் கவர்ந்தது. ஆனால் அவளது நம்பிக்கை உணர்ச்சி என்னைப் பெரிதும் கவர்ந்தது. மிகவும் மோசமான முறையில் பியானோ வாசித்து நல்ல விதமாக வாசித்ததாக நம்பிக்கை யுணர்ச்சியுடன் நடந்து கொள்வது பெரும் சாதனை என நான் நினைக்கிறேன்".

ஆனால் மைனு மில்லருடன் அன்று மாலை ஏற்பட்ட சந்திப்பு எடிசனின் தனிமையான வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அவள்மீது அவர் காதல் கொண்டார்; அவர்களது ஜீவிய காலம் முழுவதும் இக்காதல் நீடித்திருந்தது.

1886-ம் வருடத்திலே மிஸ் மில்லரை மணம் செய்து கொண்ட போது எடிசனுக்கு வயது முப்பத்தொன்பது. நல்ல கல்வி பெற்றவளும் அமைதியான சுபாவமுடையவளுமான மைனு மில்லர் பல வழிகளிலும் சங்கோஜப் பேர்வழியும் சிறுபிள்ளைத் தனமான 'முதியவ'ருமான தமது கணவருக்கு ஒத்தாசையாக இருந்து வந்தாள். மார்ஸ் பரிபாஷை (Morse Code) யை அவளுக்குக் கற்றுக் கொடுத்து அந்த பரிபாஷையிலேயே அவளுடன் பேசி வந்தார். உண்மையை உரைக்குமிடத்து அந்த பரிபாஷையிலேயே தமது காதலையும் அவளுக்குத் தெரிவித்தார். சினிமா தியேட்டரிலே இருவரும் இருக்கும்போது முக்கிய வசனப் பகுதிகளைத் தனது கை விரல்களால் சமிக்ஞை செய்து அவருக்கு அவள் தெரிவிப்பாள். சமூக வைபவங்களிலே விருந்தாளிகள் இருப்பதையும் பொருட் படுத்தாமல் பரிபாஷையில் காதல் வார்த்தைகளைத் தெரிவிக்க ஆரம்பித்து விடுவாள். தமது செவிட்டுத் தன்மையை சரிப்படுத்தி அருமை மனைவியுடன் அளவளாவி அகமகிழ்வெய்த மார்ஸ் முறையை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். நியூ ஜெர்ஸியில் அவர் கிரயம் வாங்கிய விஸ்தாரமான வீட்டிலே இருவரும் இன்பகரமான இல்வாழ்க்கை நடத்தி வந்தனர்.

வயது வித்தியாசம் அவர்களது இன்ப வாழ்வுக்கு இடைஞ்சலாக இருக்கவில்லை. அவரது இளைய மனைவிக்கு எடிசன், என்றும் பதினறு வயது பாலகர் போலவே தோன்றினர். நடை, உடை, பாவனையிலேகூட ஒரு சிறு பையனைப் போல அவர் அசட்டையாகவும், அசிரத்தையாகவும் இருந்தார். உணவைப் புறக்கணித்து விடுவது போலவே, தலை மயிரைச் சீவி விடாமலும், கழுத்துக் குட்டை (Tie) அணிந்து கொள்ளாமலும் விருந்துகளில் அவர் கலந்து கொண்டு வந்தார். அவரது அவலட்சணமான தோற்றத்தை ஒழித்துக்கட்ட மைனு மில்லர் முயற்சி எடுத்துக் கொண்டாள். அவரது கோட்டை எடுத்து அவள் ஒளித்து வைத்து விடுவாள். எனவே, விருந்துக்குப் புறப்படுமுன் அவளைத் தேடி கண்டு பிடித்து அவளிடமிருந்து கோட்டை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு எற்பட்டது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, அவரை முகக்ஷவரம் செய்து கொள்ளவும் தலை மயிரை சீவி விடவும் சுத்தமான சொக்காய் போட்டுக் கொள்ளவும் செய்தாள்.

உணவு உட்கொள்ளாமலேயே, அல்லது உணவு பற்றிச் சிந்தனை கூட இல்லாமலேயே பல நாட்கள் தொடர்ந்து ஆராய்ச்சி அல்லது பரிசோதனையில் ஈடுபட்டுவந்த அவரை மைனு வற்புறுத்தி தினந் தோறும் ஒரு தடவையாவது சூடான பலகாரம் சாப்பிடுமாறு செய்தாள். பிடிவாதமாகப் போரில், அதாவது தீவிர ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருக்கும் சமயங்களில் அவள் ஒரு தட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டு ஆராய்ச்சிக் கூடத்துக்கே நேரில் சென்று அவரிடம்

அளித்துச் சாப்பிடச் செய்வாள். அவரை அவள் கேலி செய்யவும் ஆரம்பித்தாள். அடிக்கடி அவரது அலுவலகத்துக்கு சாப்பாடு அனுப்பி வைக்கும்போது கீழ்கண்ட குறிப்பையும் எழுதி அனுப்பு வாள். "இந்த வாரத்தில் என்றாவது ஒருநாள் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்".

வெஸ்ட் ஆரஞ்சில் புதிய ஆராய்ச்சிக் கூடமும் தொழிற் சாலையும் ஏற்படுத்தினர். வருடங்கள் செல்லச் செல்ல, இவற்றை அவர் விஸ்தரித்து வந்தார். ஆராய்ச்சிக்கான சாதனங்களும் வசதிகளும் அங்கு ஏராளமாக விருந்தன. புதிய மருந்து அல்லது ரசாயனப் பொருள் கண்டு பிடிக்கப் பட்டதும் அதன் மாதிரியை உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு உலகில் பல்வேறு பாகங்களிலு முள்ள எல்லா பெரிய ரசாயனக் கம்பெனிகளுக்கும் அவர் உத்தரவு விடுத்தார். படிப்படியாக ஏராளமான விஞ்ஞானக் கருவிகளையும் நூல்களையும் அவர் சேகரித்து விட்டார். வீட்டு நிர்வாகத்தையும் மூன்று குழந்தைகளின் பராமரிப்பையும் மைனு திறம்பட ஏற்று நடத்தியமையால் ஆராய்ச்சியில் பூரணமாக ஈடுபட அவரால் முடிந்தது.

1887-ம் வருடம் கோடைக் காலத்தில் ஒரு தினம் நண்பரொருவர் எடிசனுக்கு நூதன நன்கொடை அளித்தார். "வாழ்க்கைச் சக்கரம்" என்னும் சாதாரண, இயந்திர பொம்மையே அது. ஒரு நபர் அதன் சந்து வழியாகப் பார்த்து, சக்கரத்தைச் சுற்றியதும் பல படங்கள் பல்வேறு காட்சிகள் தோன்றின. பல லட்சக் கணக்கானவர்கள் இந்த வேடிக்கையைப் பார்த்துப் பரவச மடைந்தனர்.

சக்கரத்தைச் சுழற்றி நடன மாடும் கரடியின் திரு விளையாடல்களைக் கண்டு களிபேருவகை அடைந்தார் எடிசன். சிறிது நேரத்துக்குள் அவரது மகிழ்ச்சி மங்கி விட்டது; அந்த விளையாட்டுக் கருவியை அவர் கூர்ந்து கவனிக்கலானர். பல படங்களை வைத்துச் சக்கரத்தைச் சுழற்றி விட்டுப் பார்க்கும் போது பல காட்சிகள் தோன்றுகின்றது போல பல சிறு போட்டோக்களை வைத்து அதி வேகமாகச் சக்கரத்தைச் சுற்றி விட்டால் சலனப் படங்கள் காண்பது சாத்திய மாகுமா என்பதை அவர் ஆராய ஆரம்பித்தார்.

தமது குறிப்புப் புத்தகத்தில் அவர் படங்கள் வரையலானர். கேளிக்கை உலகிலே புதிய, புரட்சிகர மாறுதலைத் தோற்று வித்துப் பெரிய தொரு தொழிலுக்கு அஸ்திவார மிட்ட சினிமா காமிராவைப் பற்றிய எடிசனின் முதல் முயற்சி இந்த படங்களே யாகும்.

தமது காமிராவை வைத்து எடிசன் நான்கு வருடங்கள் பரிசோதனை நடத்தினர். அதே சமயத்தில் ஈஸ்ட்மான் கோடாக் எஞ்சினீர் களுடனும் அவர் சேர்ந்து வேலை செய்து தமக்குத் தேவையான பிலிமையும் விளக்கிக் கூறினர். கடினமான எளிதில் சுற்றி வைக்கக் கூடிய விதத்தில் வளைத்து கொடுக்கும் தன்மையுள்ள உருளை பிலிம் (Roll Film)களை ஈஸ்ட்மான் தயாரித் திருந்தார்.

இறுதியில், ஒரு வினாடிக்கு இருபது முதல் நாற்பது படங்கள் எடுக்கும் சக்தியுள்ள காமிராவை எடிசன் செய்து முடித்தார்.

1889-ம் வருடம் தமது ஆராய்ச்சிக் கூடத்தில் ஒரு பேசும் படத்தை அவர் திரையிட்டுக் காட்டினார். பிலிம் நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த வாறு கிராமபோன் இயங்கியது அநேக வருடங்கள் வரை பிலிம் தொழிலிலிருந்து அவருக்கு உரிமைப் பணம் கிடைத்துக் கொண்டிருந்தது. பிலிம் தொழில் அதிபர்களில் முதன்மையானவர் எனஎடிசனை வர்ணிப்பது மிகையாகாது.

1890-ம் வருட பிற்பகுதியிலும் 1900-ம் வருட துவக்கத்திலும் பட தயாரிப்புத் தொழிலில் அவர் ஈடு பட்டிருந்தார். மிகப் பெரிய கட்டிட மொன்று நிர்மாணித்தார். இக்கட்டிடத்தின் உள் புறத்திலும் வெளிப் புறத்திலும் கரும் தார் காகிதம் போடப்பட்டது. சூரியனோடு சுழலக் கூடிய விதமாக அது அமைக்கப்பட்டது. இதனால் கூரை வழியாகப் பட்டப் பகலில் வெளிச்சம் ஒவ்வொரு வினாடியும் இருந்து கொண்டிருக்க முடிந்தது.

ஹாஸ்ய பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் கதை எழுதிக் கொண்டும் நடிகர்களை 'டைரக்ட்' செய்து கொண்டும் காமிராக்களை இயங்கச் செய்து கொண்டும் அவற்றைப் பழுது பார்த்துக் கொண்டும் படத் தொழிலின் பல பிரிவுகளிலும் அவர் பங்கு எடுத்து வந்தார். அவரது முதல் தயாரிப்புகள் மிகக் குரூரமானவையாக விருந்தன. மிகப் பளுவான சாமான்களைத் தூக்குவதில் பிரசித்திப் பெற்ற ஜிம்கார் பெட் சில ரவுண்டுகள் குத்துச் சண்டை போடுவதையும் குறும்புத் தன முள்ள குரங்குடன் இத்தாலிய ரொருவர் போராடிக் கொண்டிருப்பதையும் இதைப் போன்ற காட்சிகளையும் படம் பிடித்திருந்தார். அவை நன்றாக இல்லாமற் போனாலும் தியேட்டரில் திரளாக மக்கள் கூடிக் காட்சிகளைக் கண்டு களித்து வந்தனர். பின்னர், ஒரு லட்சம் டாலர் செலவில் நியூயார்க்கில் கண்ணாடி ஸ்டுடியோவை நிர்மானித்து அவர் அனேக முழு நீளப் படங்கள் தயாரித்தார்.

பிலிம் தொழில் ஸ்திரமானதும் மற்ற விஷயங்களில் அவர் கவனம், செலுத்தலானார். ராண்ட்ஜென் புதிதாகக் கண்டு பிடித்திருந்த எக்ஸ்ரே பற்றிப் பரிசோதனை நடத்திக் கொண்டிருந்த போது பிளொராஸ் கோப் (Fluoros Cope) என்னும் கருவியை அவர் கண்டு பிடித்தார். இக்கண்டு பிடிப்பின் முழு உரிமையை வைத்தியத் தொழிலில் ஈடு பட்டிருப்போருக்கு அவர் அர்ப்பணம் செய்தார். அதே சமயத்தில் முதல் பிளாரி செண்ட் (Fluores Cent) மின்சார விளக்கையும் அவர் தயாரித்தார். **(தொடரும்)**

---

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
**Printed at Shahul Hameedia Press, Madras.**

187077

வெளிவந்து விட்டது! முந்துங்கள் !!

சொற்ப பிரதிகளே அச்சாயின!

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

(ஐந்தாம் பாகம்)

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய கிருபையினல் "தப்ஸீருல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்" என்னும் எமது அருமை பெருமை வாய்ந்த தமிழ் தப்ஸீர் (குர்ஆன் விளக்கவுரையின்) ஐந்தாம் வால்யூம் என்னும் புதிய பாகம் வெளிவந்து விட்ட செய்தியை, நம் தமிழ் முஸ்லிம் மகா ஜனங்களுக்குச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த தப்ஸீர் முதல் நான்கு பாகங்களையும் வாங்கிப் படித்து பயனடைந்த அபிமானிகளுக்கு இந்த ஐந்தாம் பாகத்தின் சிறப்பைப் பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. குர்ஆனின் ஒவ்வொரு ஆயத்தும் திருத்தமான பெரிய சுத்த அறபு எழுத்தில் எழுதி பிளாக் செய்து அச்சிட்டிருப்பதோடு அதன் கீழ் செந்தமிழில் தெளிவான தர்ஜுமாவும் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் வழக்கம்போல், அந்த மொழி பெயர்ப்பின் விளக்க உரை, ஷானே நுஜூல் என்னும் காரணார்த்தம், ஹிக்காயத், ரிவாயத் என்னும் கதா வரலாறுகள் முதலிய எல்லாவித பயான்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய அறபு, உர்து தப்ஸீர் கிரந்தங்களி லிருந்தெல்லாம் இந்த வியாக்யான உரைகள் திரட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதன் கேர்த்தியும் பெருமையும் நேரில் பார்த்தால் தெரியும்.

இந்த தப்ஸீரின் ஐந்தாம் பாகமானது, குர்ஆனில் 18-வது ஜுஸு முடிவு முதல் 23-வது ஜுஸு தொடர்க்கம் வரை சுமார் 5-ஜுஸுகளுடையதாய் அதாவது ஸூறத்துல் புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூறுக்களையும் 930-பக்கங்களில் கொண்டதாய், கேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. சீக்கிரம் பிரதிகளுக்கு ஆடர் செய்யுங்கள்.

ஹதியா ரூ. 12-00

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5.

2C
6

# ஹுர்முஜ் கதை

## ஓர் இனிய தமிழ் நாவல்

ரோமாபுரியில் மனுநீதி வழுவாது நியாய பரிபாலனஞ் செய்து சிறந்து விளங்கிய அலக்ஸாண்டர் சக்ரவர்த்தியின் தவப்புத்திர ரத்தினமாகிய ஹுர்முஜ் இளவரசருடையவும், கூஜான் தேசத்தரசரின் புத்திரி அழகிற் சிறந்த "குல்" (புஷ்பம்) என்னும் இளவரசியினதும் சரித்திர அலங்கா ரத்தை பதிற்றூண்டுகளின் முன்னர் உருது, ஹிந்தி பாஷை யில் புத்தகமாக்கப் பட்டிருந்ததை தமிழ் நாட்டாரும் அறிந்து ஆனந்திக்குமாறு, தமிழில் மொழி பெயர்த்து "ஹுர்முஜ்" என்னும் நாமம் சூட்டப்பட்டிருக்கிறது.

இச்சரிதம், எப்புத்திமானையும் தன்னில் கவரச் செய்யும் இயல்பினை யுடையது. இதன் சிலபாகம் காதலர்களின் காதலையும், பெண்மணிகளாகிய கண்மணிகளுக்கு முக்கிய மாய் வேண்டிய கற்புடைமையும் வரையறுத்துப் போதிக் கும். சில பாகம் போர்த் திறத்தைப் பூட்டும், சில பாகம் தளரா முயற்சி பலன் தரும் என்பதை ஸ்திரப்படுத்தும், சில பாகம் பில்லி சூனியப் பீடறுக்கும் வழியைக் காட்டும், சில பாகம் தந்திரோபாயத்தையும் சமயத் தருவாயில் பிரயோகிக்க வேண்டிய சாமார்த்தியத்தையும் கற்பிக்கும், சில பாகம் துன்புற்றவன் இன்புறுவா னென்பதை யெடுத்துக் காட்டும்.

இதன் விலை ரூ. 2-28

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.